

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.10.2025 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம்.சாய்குமார் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அக். 19 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, வடகிழக்குப் பருவமழை காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னேற்பாடு நடவடிக்கைகள் மற்றும் ஆயத்த நிலைகள் குறித்து திருவாரூர், தென்காசி, விருதுநகர், இராமநாதபுரம், தேனி, கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி மூலம் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வருவாய் நிருவாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எம். சாய்குமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், பேரிடர் மேலாண்மைத் துறை ஆணையர் திருமதி சிஜி தாமஸ் வைத்தியன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கோ.சண்முகநாதன் துணைவியார் அண்மையில் மறைந்த திருமதி யோகம் சண்முகநாதன் அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரது திருவுருவப்படத்திற்கு திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். உடன் குடும்பத்தினர் உள்ளனர்.

# உத்திரமேரூர் ஏரி நிரம்பியது: க.சுந்தர் எம்.எல்.ஏ. பார்வையிட்டார்!

## க.செல்வம் எம்.பி. – கழகத்தினர் பங்கேற்பு!

காஞ்சிபுரம், அக். 22 - காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஏரி (வைர மேக தடாகம்) நேற்று நிரம்பியதை அடுத்து 19.10.2025 அன்று நரிமடையில் நீர் வழிந்து வெளியேறியது.

தகவல் அறிந்த காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளரும் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் விரைந்து வந்து, ஏரியின் பாதுகாப்புப் பணிகளை பார்வையிட்டு, நீர் வெளியேறுவதை மலர் தூவி வரவேற்றார்.

மேலும் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம்., ஒன்றியகுழு தலைவர் ஹேமலதா ஞானசேகரன்,

ஒன்றிய செயலாளர் கெ.ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரி வள்ளல், பேரூராட்சி தலைவர் பொன்.சசிகுமார், ஒன்றிய துணை செயலாளர்கள் எஸ்.தயாளன், சுகுணா சுந்தரராஜன், இளைஞரணி. ஆதி நாராயணன், கோபிநாத், ஊராட்சி தலைவர் கிருஷ்ணன், ஒன்றியகுழு உறுப்பினர் கலைச்செல்வி உமாபதி, முன்னாள் தலைவர் பெருமாள் மற்றும்கழக தோழர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்




12வது உலகத் தமிழர் பொருளாதார மாநாடு மற்றும் உலக பொருளாதார உச்சி மாநாடு அமெரிக்காவின் வாஷிங்டன் அருகே நடந்தது. மாநாடு தொடர்பான அறிக்கை வெளியிடும் நிகழ்ச்சி சென்னையில் நடந்தது. இதில் மாநாடு ஒருங்கிணைப்பாளர் ராஜாராம் சீனிவாசன், உலகப் பொருளாதார நிறுவனம் மற்றும் சென்னை வளர்ச்சி கழகத் தலைவர் டாக்டர் வி.ஆர்.எஸ்.சம்பத், வி.ஐ.டி. வேந்தர் கோ.விசுவநாதன், தி.மு.க. செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், ஐ.எப்.எஸ். ஓய்வு அதிகாரி மகாலிங்கம், ஜெம் கிரானைட்ஸ் தலைவர் வீரமணி ஆகியோர் பங்கேற்றனர்.

